
தினகனி
செய்திகள் மற்றும்விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 133 | 4 Pages | 11.12.2024 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 133 | 4 பக்கங்கள் | 11.12.2024 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**புக்கி லமைந்தின்று கொல்லோ உடம்பினுள்**
**துச்சி லிருந்த உயிர்க்கு**

**விளக்கம்: (நோய்களுக்கு இடமாகிய) உடம்பில் ஒரு மூலையில் குடியிருந்த உயிர்க்கு, நிலையாகப் புகுந்திருக்கும் வீடு இதுவரையில் அமையவில்லையோ.**

# டங்ஸ்டன் சுரங்கம் வந்தால் நான் முதலமைச்சராக இருக்க மாட்டேன்: மு.க.ஸ்டாலின் அறிவிப்பு



சென்னை, டிச.11

தமிழகத்தில் 12ந் தேதி 3 மாவட்டங்களுக்கு ஆரஞ்சு அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது.டிசம்பர் 13ந் தேதி 15 மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தென் கிழக்கு வங்க கடல் பகுதியில் நிலை கொண்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி அடுத்த 24 மணி நேரத்தில் வலுப்பெற்று ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெறும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும் இது மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து தென் மேற்கு வங்க கடல் பகுதியில் நாளை மறுநாள் தமிழ்நாடு இலங்கை கடற்கரையை நோக்கி நகரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்காரணமாக தமிழகத்தில் நாளை 5 மாவட்டங்களுக்கு கனமழைக்கான எச்சரிக்கையும் நாளை மறுநாள் மிக கனமழைக்கான ஆரஞ்சு அலர்ட் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.அதன்படி கடலூர், மயிலாடுதுறை, நாகை, தஞ்சை, திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் நாளை கனமழையும் நாளை மறுநாள் மிக கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக கூறப்பட்டுள்ளது.இதை தவிர தமிழகத்தில் 12ந் தேதி திருச்சி, பெரம்பூர், கரூர் ஆகிய 3 மாவட்டங்களுக்கு ஆரஞ்சு அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. அதே நாளில் 20 மாவட்டங்களான நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர், சேலம், நாமக்கல், திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, அரியலூர், கள்ளக்குறிச்சி, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், சென்னை, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களுக்கு கனமழைக்கான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேபோல டிசம்பர் 13ல் நெல்லை, குமரி, தூத்துக்குடி, தென்காசி, மதுரை, விருதுநகர், ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம் ஆகிய 15 மாவட்டங்களுக்கு கனமழை பெய்யும் எனவும் டிசம்பர் 14, 15ல் தமிழகத்தில் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## துருக்கி: நடுவானில் ராணுவ ஹெலிகாப்டர்கள் மோதி விபத்து 5 வீரர்கள் பலி



அங்காரா, டிச.11

துருக்கியின் இஸ்பார்டா மாகாணத்தில் உள்ள ராணுவ தளத்தில் வழக்கமான பயிற்சிகள் நடைபெற்றன. அப்போது பயிற்சியில் ஈடுபட்டிருந்த ஹெலிகாப்டர்கள் ஒன்றுக்கொன்று மோதின. இதில் ஒரு ஹெலிகாப்டர் கீழே விழுந்து சுக்குநூறாக நொறுங்கியது.

அதேசமயம் மற்றொரு ஹெலிகாப்டர் பத்திரமாக தரையிறங்கியது. எனினும் இந்த விபத்தில் ராணுவ ஜெனரல் உள்பட 5 வீரர்கள் உடல் சிதறி பலியாகினர். இந்த சம்பவம் குறித்து விமான போக்குவரத்து துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சிரியாவில் அரசாங்கம் இன்னும் செயல்படுகிறது பிரதமர் தகவல்



டமாஸ்கஸ், டிச.11

சிரியாவில் அதிபர் ஆசாத்தின் படைகளுக்கு எதிராக நீண்ட காலமாக ஆயுத மோதலில் ஈடுபட்டு வந்தகிளர்ச்சிக்குழுவினர்நாட்டின்பெரும்பகுதிகளை கைப்பற்றி உள்ளனர். இதையடுத்து 50 ஆண்டு கால ஆசாத் குடும்பத்தின் ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது. அதிபர் ஆசாத் பாதுகாப்பு கருதி நாட்டை விட்டு வெளியேறி ரஷியாவில் தஞ்சம் அடைந்துள்ளார். இதனால் சிரியாவில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே, ரசாயன ஆயுதங்கள் இருப்பதாக சந்தேகிக்கப்படும் இடங்கள் மற்றும் நீண்ட தூர ராக்கெட்டுகள் தீவிரவாதிகளின் கைகளில் சிக்காமல் இருக்க வான்வழி தாக்குதல்களை நடத்தி வருவதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. மேலும் அரசு படைகள் வெளியேறிய பகுதிகளில் இஸ்ரேல் ஒரு பாதுகாப்பு மண்டலத்தை கைப்பற்றியுள்ளது.

வடக்கு சிரியாவில், அமெரிக்காவின் ஆதரவுடன் குர்திஷ் தலைமையிலான படைகளிடமிருந்து மன்பிஜ் நகரத்தை எதிர்க்கட்சி படைகள்கைப்பற்றியதாகதுருக்கிகூறியது.கடந்தகாலத்தில்சண்டையிட்ட ஆயுதக் குழுக்களிடையே பிளவு ஏற்பட்டுள்ளதை இது காட்டுகிறது.

ஆசாத் நாட்டை விட்டுச் சென்ற பிறகு அவரது ஆட்சியில் முக்கிய பதவிகளில் இருந்தவர்கள் மற்றும் பெரும்பாலான உயர் அதிகாரிகளும் வெளியேறிவிட்டனர். அதேசமயம், பிரதமர் முகமது காஜி ஜலாலி தொடர்ந்து பதவியில் நீடிக்கிறார். நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்காகவும்,புதியதலைமையைகொண்டுவருவதற்காகவும் கிளர்ச்சிக் குழுவினருக்கு ஒத்துழைப்பு கொடுத்து வருகிறார்.

சிரியாவில் அரசாங்கம் இன்னும் செயல்பட்டு வருவதாகவும், இயல்பு நிலையை மீட்டெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் பிரதமர் முகமது காஜி ஜலாலி கூறி உள்ளார்.

"அதிகார மாற்றம் சுமுகமாக இருக்கும் வகையில் பணியாற்றி வருகிறோம். பாதுகாப்பு நிலைமை முன்னேற்றம் அடைந்துள்ளது. கிளர்ச்சியாளர்களுடன் அரசாங்கம் ஒருங்கிணைந்து செயல்படுகிறது. கிளர்ச்சிக்குழுதலைவர்அபுமுகமதுஅல்கோலானிஎன்றுஅழைக்கப்படும் அஹ்மத் அல்ஷாராவை சந்திக்க தயாராக இருக்கிறேன்" என்றும் அவர் கூறினார்.

## சிரியாவில் பெண்களின் தனிப்பட்ட சுதந்திரத்தில் தலையிட மாட்டோம்: கிளர்ச்சியாளர்கள் உறுதி



டமாஸ்கஸ்: டிச.11

சிரியாவில் பல ஆண்டுகளாக நீடித்த உள்நாட்டு போரில் முக்கிய திருப்பமாக கிளர்ச்சியாளர்கள் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி உள்ளனர். சமீபத்தில் அதிபர் பஷார்அல் ஆசாத்தின் அரசாங்கத்தை கிளர்ச்சியாளர்கள் கூட்டணி வீழ்த்தி தலைநகர் டமாஸ்கஸை கைப்பற்றியது. இதனால் நாட்டில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், சிரியாவில் பெண்களின் ஆடை விஷயம் உள்ளிட்ட தனிப்பட்ட சுதந்திரத்தில் தலையிடமாட்டோம் என்று கிளர்ச்சியாளர்கள் கூறி உள்ளனர்.

இதுபற்றி கிளர்ச்சிக் குழு சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ள செய்தியில், "பெண்களின் ஆடை விஷயத்தில் தலையிடுவது அல்லது அவர்களின் அடக்கம், ஆடை கட்டுப்பாடு தொடர்பான எந்தவொரு கோரிக்கையும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட சுதந்திரம் மற்றும் தனிநபர்களின் உரிமைகளுக்கு மரியாதை அளிப்பதேநாகரீகமானதேசத்தைக்கட்டியெழுப்புவதற்கானஅடிப்படை" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருவண்ணாமலையில் தேரோட்டம் ஏராளமான பக்தர்கள் தரிசனம்



திருவண்ணாமலைடிச.11

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் கார்த்திகை தீபத்திருவிழாகடந்த 4ந் தேதி கொடியேற்றத்துடன்தொடங்கிதொடர்ந்து நடைபெற்று வருகிறது. தினமும் காலையில் விநாயகர், சந்திரசேகரர் வீதி உலாவும், இரவில் பஞ்சமூர்த்திகள் வீதி உலாவும் நடக்கிறது. நேற்று இரவு வெள்ளி தேரோட்டம் நடைபெற்றது.

தீபத் திருவிழாவின் 7வது நாளான இன்று பஞ்ச மூர்த்திகள் 5 தேர்களில் வலம் வரும் மகா தேரோட்டம் நடந்தது. காலை 6.36 மணிக்கு விநாயகர் தேர் புறப்பாடு நடைபெற்றது. ஒரு புறம் ஆண்களும் மறுபுறம் பெண்களும் வடம் பிடித்து இழுத்துச் சென்றனர். விநாயகர் தேர் நிலைக்கு வந்த பிறகு முருகர் தேரோட்டம் நடைபெற்றது. மதியம் அருணாசலேஸ்வரர் மகாதேரோட்டம் நடைபெற்றது.

தேரோட்டத்தில் கலெக்டர் பாஸ்கர பாண்டியன், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு டாக்டர் சுதாகர், உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்தனர். இரவில் பராசக்தி அம்மன் தேரோட்டமும், சண்டிகேஸ்வரர் தேரோட்டமும் நடைபெறுகிறது. அம்மன் தேரை பெண்கள் மட்டுமே இழுப்பார்கள். இந்த தேரின் பின்னால் சண்டிகேஸ்வரர் தேர் இழுக்கப்படும். சண்டிகேஸ்வரர் தேரை சிறுவர், சிறுமியர்கள் இழுப்பார்கள

பஞ்சமூர்த்திகள் தேரோட்டம் நடைபெற்றதால் அருணாசலேஸ்வரர் கோவிலில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டு இருந்தனர். ராஜகோபுரம் முன்பு ஏராளமான பக்தர்கள் கற்பூரம் ஏற்றி வழிபட்டனர்.

தேரோட்டம் நடைபெறும் நாளன்று நேர்த்திக் கடனாக பக்தர்கள் கரும்பில் சேலையால் தொட்டில் கட்டி தங்கள் குழந்தைகளை சுமந்தபடி மாட வீதியை வலம் வருவார்கள். அதன்படி, இன்று இன்று ஏராளமான பக்தர்கள் கரும்பு தொட்டில் அமைத்து மாட வீதியை வலம் வந்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.

விழாவின் சிகர நிகழ்வாக, 13ம் தேதி (வெள்ளிக்கிழமை) அதிகாலையில் கோவிலில் பரணி தீபமும், மாலையில் கோவில் பின்புறம் உள்ள மலை உச்சியில் மகா தீபமும் ஏற்றப்படும்.

## நாய்களின் தொல்லையை கட்டுப்படுத்த நடவடிக்கை அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு



சென்னை, டிச.11

தமிழக சட்டசபையின் 2ம் நாள் கூட்டத்தின் இன்றைய நிகழ்வில் தமிழகம் முழுவதும் மாடுகள், நாய்கள் தொல்லையால் மக்கள் அவதி அடைந்துள்ளனர் என்று இதனை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் அன்பழகன் கோரிக்கை விடுத்தார்.

இதற்கு நகராட்சித்துறை அமைச்சர் கே.என்.நேரு பதில் அளித்து கூறியதாவது:

தமிழ்நாட்டில் நாய்களின் தொல்லை அதிகரித்து வருகிறது; சென்னையில் உள்ளதைபோல் நாய்கள் இன கட்டுப்பாட்டு மையத்தை,

அனைத்து மாவட்டங்களிலும் அமைக்க உள்ளோம். நாய்கள் தொல்லை குறித்த புகார்களுக்கு மாநகராட்சிகள் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பிராணிகள் வதை சட்டத்தில் நாய்கள் மற்றும் மாடுகளை முழுமையாக அகற்ற வழியில்லை. சில இடங்களில் மாடுகளை பிடித்தால் அதன் உரிமையாளர்கள் கோபமடைகின்றனர்.

மாடுகள், நாய்கள் தொல்லையை கட்டுப்படுத்த அனைத்து மாநகராட்சி, நகராட்சி ஆணையர்களிடம் நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி, நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.


## திடீரென முடங்கிய ஐ.ஆர்.சி.டி.சி. இணையதளம்: பயணிகள் அவதி

சென்னை, டிச.11

நாடு முழுவதும் ரெயில் டிக்கெட் ஐ.ஆர்.சி.டி.சி. இணையதளம் மற்றும் அதற்கான பிரத்யேக செல்போன் செயலி வாயிலாக முன்பதிவு செய்யப்படுகிறது. டிக்கெட் முன்பதிவு உள்ளிட்ட காரணங்களுக்காக நாள்தோறும் லட்சக்கணக்கான பயணிகள் இந்த இணையதளத்தை பயன்படுத்தி வருகிறார்கள்.

இந்தநிலையில், இன்று காலை 10.15 மணி அளவில் திடீரென ஐ.ஆர்.சி.டி.சி. இணையதளம் திடீரென முடங்கியது. இதனால், பயணிகள் டிக்கெட் முன்பதிவு செய்ய முடியாமலும், ரத்து செய்ய முடியாமலும் அவதி அடைந்தனர். குறிப்பாக, தட்கல் டிக்கெட் முன்பதிவு செய்வோர் கடும் அவதிப்பட்டனர். இணையதளத்தில் ஏற்பட்ட கோளாறை சரி செய்யும் பணியில் தொழில் நுட்ப வல்லுனர்கள் ஈடுபட்டனர். மதியம் 12 மணிக்கு பிறகு டிக்கெட் முன்பதிவு முழுமையாக சீரானது. இதுபோன்று ஐ.ஆர்.சி.டி.சி.இணையதளம்அடிக்கடி தொழில் நுட்ப கோளாறு ஏற்படுவதாக பயணிகள் புகார் அளித்துள்ளனர்.

## வீட்டின் கதவை உடைத்து வாழைத்தாரை தூக்கி சென்ற காட்டு யானை



மேட்டுப்பாளையம், டிச.11

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் மற்றும் சிறுமுகை ஆகிய வனச்சரக பகுதிகளில் இரவு நேரங்களில் காட்டு யானைகள் நடமாட்டம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால் அப்பகுதி மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

இந்தநிலையில் நேற்று இரவு சிறுமுகை வனச்சரகத்திற்கு உட்பட்ட வேடர்காலனி பகுதியில் உள்ள குடியிருப்பு ஒன்றில் ஒரு காட்டு யானை புகுந்தது. தொடர்ந்து அப்பகுதியில் உள்ள ஒரு வீட்டை நோக்கி வந்தது. இதை கண்டு அதிர்ச்சி அடைந்த அந்த வீட்டினர் மறைவான ஒரு இடத்திற்கு சென்றனர்.

இதையடுத்து காட்டுயானை, அந்த வீட்டின் ஒரு அறையின் கதவை உடைத்து தும்பிக்கையால் உள்ளே இருந்த வாழைத்தார் ஒன்றை தூக்கிக்கொண்டு சென்றது. இதனை அங்கிருந்தவர்கள் சிலர் தங்களது செல்போனில் புகைப்படம், வீடியோ எடுத்தனர். அவை தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

# ஈரோட்டில் பயங்கரம்: 4 வயது மகன் மீது தீ வைத்து கொளுத்திய தந்தை



ஈரோடு, டிச.11

மதுரையைச்சேர்ந்ததிருமலை செல்வனுக்கும், ஈரோடு, மாணிக்கம் பாளையம், முனியப்பன் கோவில் தெருவை சேர்ந்த சுகன்யா (வயது 23) என்பவருக்கும் திருமணம் ஆகி 7 வயதில் ஒரு பெண் குழந்தையும், 4 வயதில் ஒரு மகனும் என 2 குழந்தைகள் உள்ளனர். சுகன்யா மதுரையில் கணவருடன் வசித்து வந்தார்.இந்நிலையில் திருமலை செல்வன் அடிக்கடி மது அருந்தி விட்டு சந்தேகப்பட்டு சரண்யாவை அடித்து தகராறில் ஈடுபட்டு வந்துள்ளார். தொடர்ந்து தகராறில் ஈடுபட்டதால் சுகன்யா தனது 2 குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு ஒரு மாதத்திற்கு முன்பாக ஈரோடு மாணிக்கம்பாளையத்தில் உள்ள தனது தாய் வீட்டிற்கு வந்துள்ளார். ஈரோட்டில் தனது தாய் வீட்டில் குழந்தைகளுடன் தங்கி இருந்த சுகன்யா சாயப்பட்டறைக்கு வேலைக்கு சென்று வந்தார்.

இந்த நிலையில் நேற்று இரவு திருமலை செல்வன் மனைவி மற்றும் குழந்தைகளை பார்ப்பதற்காக ஈரோடுக்கு வந்தார். சுகன்யாவை தன்னுடன் குடும்பம் நடத்த வருமாறு அழைத்துள்ளார். அப்போது இது தொடர்பாக கணவன்மனைவி இருவருக்கும் இடையே வாய் தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் ஆத்திரம் அடைந்த திருமலை செல்வன் தான் மறைத்து வைத்திருந்த பெட்ரோலை மனைவி மற்றும் இரு குழந்தைகள் மீது ஊற்றி தீ வைத்துள்ளார்.இதில் சுகன்யா மற்றும் 7 வயது மகள் சுதாரித்து விலகிய நிலையில் 4 வயது மகன் மீது தீப்பிடித்தது.

இதனால் மகன் வேதனையால் அலறினான். இதை பார்த்து அதிர்ச்சி அடைந்த சுகன்யா கூச்சலிட்டார். உடனே அக்கம் பக்கத்தினர் ஓடி வந்து தீயை அணைத்து குழந்தையை மீட்டு சிகிச்சைக்காக ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். அங்கு 70 சதவீத தீக்காயத்துடன் உயிருக்கு ஆபத்தான நிலையில் குழந்தை சிகிச்சை பெற்று வருகிறது. இது குறித்து சுகன்யா ஈரோடு வீரப்பன் சத்திரம் போலீசில் புகார் செய்தார்.

அதன் பெயரில் போலீசார்வழக்குப்பதிவு செய்து திரு மலைச்செல்வனிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# பொது இடங்களில் புகை பிடிப்பதை கடுமையாக தண்டிக்க வேண்டும்: அன்புமணி ராமதாஸ்



சென்னை, டிச.11

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:சென்னை உள்ளிட்ட தமிழகத்தின் பெரும் பான்மையான மாவட்டங்களில்நுரையீரல்புற்றுநோய் அதிகரித்து வருவதாக ஆய்வில் தெரியவந்திருப்பது பெரும் அதிர்ச்சியளிக்கிறது. சென்னை அடையாறு புற்றுநோய் நிறுவனம் வெளியிட்டுள்ள 2019ம் ஆண்டின்தமிழ்நாடு புற்றுநோய் பதிவேட்டு திட்டத்திற்கான அறிக்கையில் அதிர்ச்சியூட்டும் தகவல்கள் வெளியாகியுள்ளன. தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் 3500 4000 பேருக்கு நுரையீரல் புற்றுநோய் கண்டறியப்படுவதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.தமிழ்நாட்டில் நுரையீரல் புற்றுநோய் பாதிப்பு சென்னை மாவட்டத்தில் தான் மிக அதிகமாக இருக்கிறது. சென்னையில் வாழும் ஒருலட்சம்பேரில் 8.1 பேர் இந்த நோய்க்கு ஆளாகி உள்ளனர்.பொது இடங்களில் புகைப்பிடிப்பதை தடை செய்யும் சட்டம் 2008ம் ஆண்டு அக்டோபர் 2ந் தேதி நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில், அன்றிலிருந்து கடந்த மார்ச் 31ம் நாள் வரையிலான பதினைந்தரை ஆண்டுகளில் 3.89 லட்சம் பேர் மீது மட்டுமே நடவடிக்கை எடுக்கப்பட்டு, ரூ.6.83 கோடி அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது. பொது இடங்களில் புகை பிடிப்பதை தமிழக அரசு தடுக்கத் தவறியதால் தான், பெண்களும், குழந்தைகளும் நுரையீரல் புற்று நோய்க்கு ஆளாகின்றனர். அலட்சியம், செயலற்ற தன்மை போன்ற தமிழ்நாடு அரசின் குற்றத்திற்கு அப்பாவி மக்கள் ஏன் தண்டனை அனுபவிக்க வேண்டும்? இனியும் இந்தக் கொடுமை நீடிக்கக் கூடாது.எனவே, தமிழ்நாட்டின் பொது இடங்களில் புகை பிடிப்பதை தடை செய்யும் சட்டத்தை மிகக் கடுமையாக செயல்படுத்த தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்து கிறேன்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# கட்டணம் வசூலித்து கச்சேரி நடத்தும் கல்வி நிறுவனங்களுக்கு 10 சதவீதம் கேளிக்கை வரி: அமைச்சர் கே.என்.நேரு தகவல்



சென்னை, டிச.11

தமிழக சட்டசபையில் இன்று நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கை வரி திருத்த சட்ட முன் வடிவை தாக்கல் செய்தார். அதில் கூறியிருப்பதாவது:உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கை வரி சட்டமானது அதில் குறிப்பிட்டுள்ள கேளிக்கைகள் மற்றும் பொழுது போக்குகள் மீது வரி விதிப்பதற்கும், வசூலிப்பதற்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்குகிறது. ஆனால் கல்வி நிறுவனம் உள்ளடங்களாக எந்த ஒரு நிறுவனத்தாலும் அனுமதிக்கான கட்டணத்தின் பேரில் நடத்தப்படும் இசை நிகழ்ச்சி, நாடகம், காட்சி அல்லது ஏதேனும் பிற நிகழ்ச்சிகள் மீது கேளிக்கைகள் வரி விதிக்கவும், வசூலிக்கவும் அதிகாரமளிக்கவும் எந்த ஒரு வரைமுறையும் இல்லை.எனவே மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகளுக்கும் அனுமதிக்கான கட்டணம் ஒவ்வொன்றின் மீதும் 10 விழுக்காடு வீதத்தில் கேளிக்கைகள் வரி விதிப்பதற்கும் வசூலிப்பதற்கும் தகுந்தவாறு சட்டத்தை திருத்த அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி எந்த ஒரு கல்வி நிறுவனம் அல்லது நிறுவனம் சங்கம், குழுமம் எந்த பெயரிலும் அழைக்கப்படும் நபர்களின் பிற கழகம் ஆகியவை இதில் அடங்கும்.இதன் வளாகத்தில் அல்லது நுழைவு சீட்டு, பங்களிப்பு, சந்தா எந்த வகையிலும் வசூலிக்கப்படும் கட்டணங்கள் மற்றும் அனுமதிக்கான கட்டணம் வாங்கப்படும் கல்வி நிறுவன இடங்களில் நடத்தப்படும் இசை நிகழ்ச்சி உள்ளிட்ட நிகழ்ச்சிகளுக்கு 10 சதவீத கேளிக்கைவரி உள்ளாட்சி அமைப்புகளால் வசூலிக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.இந்த சட்டமசோதாவை அறிமுக நிலையிலேயே எதிர்ப்பதாக அ.தி.மு.க. எம்.எல்.ஏ. அக்ரி கிருஷ்ணமூர்த்திகூறினார்.

# திருப்பூரில் பிளாஸ்டிக் பக்கெட் தண்ணீரில் விழுந்து 9 மாத ஆண் குழந்தை பலி



திருப்பூர், டிச.11

பீகாரை சேர்ந்தவர் அங்கஸ்குமார் (வயது 29). இவரது மனைவி அம்சிகுமாரி (23). இவர்களது 9 மாத ஆண் குழந்தை அசிஸ்.தம்பதி இருவரும் தங்களது குழந்தையுடன் திருப்பூர் எம்.எஸ்.நகர் அருகே செல்வலெட்சுமி நகர் பகுதியில் வீடு வாடகைக்கு எடுத்து பனியன் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகின்றனர்.சம்பவத்தன்று அங்கஸ்குமார் பனியன் நிறுவனத்திற்கு வேலைக்கு சென்று விட்டார். அவரது மனைவி அம்சிகுமாரி சமையல் அறையில் சமையல் வேலை செய்து கொண்டிருந்தார். அப்போது குழந்தை அசிஸ் விளையாடிக்கொண்டிருந்த சிறிது நேரத்தில் குழந்தையை காணவில்லை.

இதனால் அதிர்ச்சியடைந்த அம்சிகுமாரி குழந்தையை தேடி வெளியே ஓடிவந்தபோது அங்குள்ள தண்ணீர் நிரம்பிய பிளாஸ்டிக் பக்கெட்டிற்குள் குழந்தை தலைகுப்புற கிடந்ததை பார்த்து அதிர்ச்சியடைந்தார்.

உடனே அக்கம்பக்கத்தினர் உதவியுடன் குழந்தையை மீட்டு திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றனர். அங்கு குழந்தையை பரிசோதனை செய்த மருத்துவர்கள் குழந்தை ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இது குறித்து திருப்பூர் வடக்கு போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். சமையல் அறையில் அம்சிகுமாரி வேலை செய்து கொண்டிருந்த போது குழந்தை அசிஸ் தவழ்ந்து சென்று அருகில் பட்கெட்டில் இருந்த தண்ணீரில் தலைக்குப்புற விழுந்தபோது, யாரும் கவனிக்காததால் மூச்சுத்திணறி இறந்து இருக்கலாம் என போலீசார் தெரிவித்தனர்.பிளாஸ்டிக் பக்கெட் தண்ணீரில் குழந்தை விழுந்து இறந்த சம்பவம் திருப்பூர் பொது மக்கள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# டங்ஸ்டன் திட்டத்திற்கு எதிர்ப்பு: மதுரை கலெக்டர் அலுவலகம் முன்பு கிராம மக்கள் கவனஈர்ப்பு போராட்டம்



மதுரை, டிச.11

மதுரை மாவட்டம் மேலூர் அருகே உள்ள அரிட்டாப்பட்டி மற்றும் சுற்று வட்டார கிராமங்களில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க மத்திய அரசு இந்துஸ்தான் நிறுவனத்துக்கு ஏல அனுமதி வழங்கியதாக கூறப்படுகிறது.


இதற்கு கிராம மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.அரிட்டாப்பட்டி ஏற்கனவே பல்லுயிர் தலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த பகுதியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்கப்பட்டால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும். மக்களின் வாழ்வாதாரமும் கேள்விக் குறியாகும்.

எனவே டங்ஸ்டன் சுரங்கத்துக்கு அனுமதி அளிக்கக்கூடாது என அரிட்டாப்பட்டி மற்றும் சுற்றுவட்டார பகுதி களை சேர்ந்த முத்து வேல்பட்டி, கிடாரிபட்டி, எட்டிமங்கலம், செட்டி யார்பட்டி, நாயக்கர்பட்டி, வெள்ளாளப்பட்டி உள்ளிட்ட 50 க்கும் மேற்பட்ட கிராம மக்கள் கடந்த ஒரு மாதமாக பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். டங்ஸ்டன் திட்டத்திற்கு எதிராக மேலூர் பகுதி விவசாயிகள், வணிகர்கள் கடையடைப்பு போராட்டம் நடத்தினர்.

இந்த நிலையில் இன்று காலை மதுரை கலெக்டர் அலுவலகம் முன்பு டங்ஸ்டன் சுரங்க திட்ட எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு சார்பில் பெண்கள், விவசாயிகள் என 500 க்கும் மேற்பட்டோர் கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளுடன் திரண்டு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது சுரங்க ஏல திட்டத்தை உடனே ரத்து செய்ய வேண்டும்.

தொன்மையான தொல்லியல் சின்னங்கள் பல்லுயிர் சூழல்கள் அடங்கியுள்ள மதுரை மாவட்டத்தை பாரம்பரிய தமிழ் பண்பாட்டு மண்டலமாக அறிவித்திட வேண்டும். முல்லை பெரியாறு பாசன பகுதிகளை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக்கிட சட்டம் இயற்ற வேண்டும் என வலியுறுத்தி கோஷமிட்டனர். போராட்டத்தை முன்னிட்டு கலெக்டர் அலுவலகத்திற்கு கூடுதல் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

# 3½ ஆண்டுகளில் தமிழகத்தில் 1,670 புதிய ரேஷன் கடைகள் திறக்கப்பட்டுள்ளன அமைச்சர் தகவல்



சென்னை, டிச.11

தமிழக சட்டசபையில் இன்று கேள்வி நேரத்தின்போது, மேலூர் தொகுதியில் புதிய பகுதி நேர நியாய விலை கடைகள் அமைத்து தர வேண்டும் என்ற கேள்விக்கு அமைச்சர் பெரியகருப்பன் பதில் அளித்து கூறியதாவது: தமிழ்நாட்டில் கடந்த 3 ஆண்டுகளில் 544 புதிய நியாய விலை கடைகளும், 1,126 புதிய பகுதி நேரநியாய விலை கடைகளும் திறக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் மொத்தம் 1,670 புதிய நியாய விலை கடைகள் தொடங்கப்பட்டுள்ளது. வாய்ப்பு இருக்கும் பட்சத்தில் மேலூர் தொகுதி சின்ன கற்பூரம் பட்டி கிராமத்தில் புதிய ரேஷன்கடைகள்அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# திருப்பூரில் பெண்ணை வழிமறித்து சரமாரி அரிவாள் வெட்டு: மர்ம நபர்கள் வெறிச்செயல்

திருப்பூர், டிச.11

திருப்பூரை சேர்ந்தவர் சரண்யா (வயது 20), திருமண மானவர். இவர் இன்று காலை தனது தாயார் வீட்டிற்கு செல்வதற்காக திருப்பூர் அவிநாசிபெருமாநல்லூர் சாலையில் தனது மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார்.

60 அடி சாலையில் சென்று கொண்டிருந்த போது பின்னால் மோட்டார் சைக்கிளில் ஹெல்மெட் அணிந்து வந்த 2 நபர்கள் சரண்யாவின் இருசக்கர வாகனத்தை மறித்துள்ளனர்.

அதில் பின்னால் அமர்ந்திருந்த ஹெல்மெட் அணிந்திருந்த நபர் தான் வைத்திருந்த கூர்மையான அரிவாளால் சரண்யாவின் கை மற்றும் கழுத்து பகுதியில் சரமாரி வெட்டினார்.

அருகில் இருந்தவர்கள் கூச்சலிடவே ஹெல்மெட் அணிந்திருந்த நபர்கள் இருவரும் இருசக்கர வாகனத்தில் தப்பி சென்றனர்.காயம் அடைந்த சரண்யாவை அக்கம்பக்கத்தினர் மீட்டு அருகில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்ட பின்பு மேல் சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதித்தனர். அங்கு சரண்யாவுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

பட்டப்பகலில் ஆட்கள் நடமாட்டம் மிகுந்த இடத்தில் பெண் மீது நடைபெற்ற இந்த தாக்குதல் சம்பவம் திருப்பூரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. குடும்பத் தகராறு காரணமாக இந்த தாக்குதல் நடந்ததா ? அல்லது வேறு ஏதேனும் காரணமா ? என்பது குறித்து திருப்பூர் வடக்கு போலீசார் விசாரணை நடத்தி வந்தனர்.இந்தநிலையில் சரண்யாவின் கணவர் ரமேஷ், திருப்பூர் வடக்கு போலீஸ் நிலையத்தில் சரணடைந்தார். எனவே அவர்தான் சரண்யாவை வெட்டினாரா? என்று போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கனமழையில் இருந்து பயிர்களையும் மக்களையும் காக்க வேண்டும் ஜி.கே.வாசன்



சென்னை, டிச.11

த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: நடப்பு ஆண்டிற்கான பருவ மழைக்காலத்தில் மாநிலத்தில் ஆங்காங்கே மழை, கனமழை, அதி கன மழை பெய்ததால் பல்வேறு மாவட்டங்களில் விவசாய நிலங்களில் பயிரிடப்பட்ட பயிர்கள்பாதிக்கப்பட்டன. இதற்கான காரணங்களில் ஒன்று முறையாக நீர்நிலைகளை பாதுகாக்க தவறியது தான் என விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.டெல்டா மாவட்டப் பகுதிகளில் நெற்பயிர்கள் பெருமளவு சேதமடைந்தது. சில இடங்களில் பாலங்கள் இடிந்து விட்டன. போக்குவரத்துக்கு பாதிப்பு. மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டது.இது போன்ற ஒரு சூழல் ஏற்படக்கூடாது என நினைத்த நிலையில் மீண்டும் ஒரு காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகி சில மாவட்டங்களில் மழையும், சில மாவட்டங்களில் கனமழையும், சில மாவட்டங்களில் அதி கனமழையும் பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு வெளியிட்டிருக்கிறது. எனவே தமிழக அரசு மீண்டும் மழையால் மாநிலத்தில் உள்ள விவசாயப்பயிர்களும், பொதுமக்களும் பாதிக்கப்படாமல் இருக்க முன்னேற்பாடான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.மேலும் தமிழக அரசு ஏற்கனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு அறிவித்த நிவாரண உதவிகள் போதுமானதல்ல என்பதை உணர்ந்து அதனை உயர்த்தி வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# டங்ஸ்டன் சுரங்கம் தமிழக அரசு தீர்மானம் நிறைவேற்றியதை வரவேற்று மக்கள் கொண்டாட்டம்





மதுரை, டிச.12

மதுரை மாவட்டம் மேலூர் அருகே உள்ள அரிட்டாப்பட்டி மற்றும் சுற்று வட்டார கிராமங்களில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க மத்திய அரசு இந்துஸ்தான் நிறுவனத்துக்கு ஏல அனுமதி வழங்கியதாக கூறப்படுகிறது. இதற்கு கிராம மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். அரிட்டாப்பட்டி ஏற்கனவே பல்லுயிர் தலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த பகுதியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்கப்பட்டால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும். மக்களின் வாழ்வாதாரமும் கேள்விக்குறியாகும்.எனவே டங்ஸ்டன் சுரங்கத்துக்கு அனுமதி அளிக்கக்கூடாது என அரிட்டாப்பட்டி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த முத்து வேல்பட்டி, கிடாரிபட்டி, எட்டிமங்கலம், செட்டி யார்பட்டி, நாயக்கர்பட்டி, வெள்ளாளப்பட்டி உள்ளிட்ட 50 க்கும் மேற்பட்ட கிராம மக்கள் கடந்த ஒரு மாதமாக பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். இந்நிலையில் தமிழக சட்டசபையில் மதுரை டங்ஸ்டன் சுரங்க உரிமத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து மதுரை மாவட்டம் வெள்ளிமலையாண்டி கோவில் அருகே போராட்டம் நடத்திய மக்கள், தமிழக அரசு தீர்மானம் நிறைவேற்றியதை வரவேற்று இனிப்பு வழங்கியும், பட்டாசு வெடித்தும் உற்சாகமாக கொண்டாடினர்.

# ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 6500 கனஅடியாக குறைந்தது

ஒகேனக்கல், டிச.11

கர்நாடக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்தது. மேலும் தமிழக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளான தேன்கனிக்கோட்டை, அஞ்செட்டி, பிலிகுண்டுலு, ராசி மணல் உள்ளிட்ட இடங்களில் மழை பெய்துள்ளது.இதனால் நேற்றுஒகேனக்கல்லுக்கு வினாடிக்கு 7 ஆயிரம் கனஅடியாக தண்ணீர் வந்தது. இந்த நிலையில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்த மழை குறைந்தது.இதனால் 8 மணி நிலவரப்படி நீர்வரத்து 6500 கனஅடி தண்ணீர் குறைந்து வந்தது. மெயின் அருவி, ஐந்தருவி, சினிபால்ஸ் உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர்ஆர்ப்பரித்துகொட்டியது. சுற்றுலா பயணிகள் குடும்பத்துடன் பரிசல் பயணம் மேற்கொண்டு காவிரி ஆற்றின் அழகை ரசித்தனர்.பின்னர் அவர்கள் மெயின் அருவியில் குளித்தும், பெண்கள் காவிரிஆற்றில்குளித்தும் மகிழ்ந்தனர்.காவிரி ஆற்றில் நீர்வரத்தை தமிழக கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

# நாகை, இலங்கை காங்கேசன் துறைக்கு மேலும் ஒரு கப்பல் சேவை: ஜனவரியில் இயக்க திட்டம்




நாகப்பட்டினம், டிச.11

இந்தியா, இலங்கை நாடுகளின்கலாச்சாரம் மற்றும் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக கடந்த ஆண்டு (2023) அக்டோபர் மாதம் 10ந்தேதி நாகை துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன்துறைக்கு பன்னாட்டு பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை தொடங்கப்பட்டது.இந்த நிலையில் கப்பல் சேவை தொடங்கப்பட்ட நாள் முதல் பயணிகள், கப்பலை பயன்படுத்தும் சுற்றுலா பயணிகள் மற்றும் வர்த்தகர்கள் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. இதன் காரணமாக நாகையில் இருந்து இலங்கைக்கு கூடுதலாக ஒரு கப்பல் இயக்க வேண்டும் என இந்தியா, இலங்கை நாட்டு வர்த்தகர்களிடையே கோரிக்கை எழுந்தது.இதனை பரிசீலித்த சிவகங்கை கப்பலை இயக்கும் சுபம் நிறுவனம், அவர்களின் கோரிக்கையை ஏற்று அடுத்த ஆண்டு (2025) ஜனவரி மாதம் முதல் சுமார் 250 நபர்கள் பயணிக்கும் வகையில் மேலும் ஒரு புதிய கப்பலை நாகையில் இருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு இயக்க திட்டமிட்டு உள்ளது.இத்தகவலை நாகையில் நடந்த நாட்டிலஸ் ஷிப்பிங் கருத்தரங்க கூட்டத்தில் சுபம் கப்பல் நிறுவனம் தெரிவித்தது.அப்போது கடல்சார் துறையில் உள்ள வேலைவாய்ப்பு பணிகள், கடல்சார் வர்த்தகம் மற்றும் அதற்கான சிறந்த ஊதியம் உள்ளிட்டவைகள் குறித்து, மாலுமிகள், என்ஜினீயர்கள், பயனாளர்கள் மத்தியில் நாட்டிலஸ் ஷிப்பிங் நிறுவன கேப்டன், ஆர்.கே.சிங் மற்றும் சுபம் கப்பல் நிறுவன பொறுப்பாளர் கீதா ராஜராஜன் ஆகியோர் எடுத்துரைத்தனர்.மேலும், கடல்சார் கல்வி மற்றும் பயிற்சியை முடித்த உள்ளூர் கடலோடிகளுக்கு முன்னுரிமை அளித்து அவர்களுக்கு சுற்றுலா மற்றும் வர்த்தக கப்பல்களில் வேலைவாய்ப்பு வழங்க உள்ளதாகவும் தெரிவித்தனர்.

# ரவுடியை துப்பாக்கியால் சுட்டுப்பிடித்த போலீசார்

சென்னை, டிச.11

சென்னையில் ரவுடியை போலீசார் துப்பாக்கியால் சுட்டுப்பிடித்தனர்.

ஓட்டேரிகாவல்நிலைய எல்லைக்குட்பட்ட பனந்தோப்பு ரெயில்வே காலனியில் ரவுடி ஹரி என்கிற அறிவழகனை ஓட்டேரி காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் பிரேம் குமார் துப்பாக்கியால் சுட்டுப்பிடித்தார்.2 கொலை வழக்குகள் தொடர்பாக தேடிச்சென்ற போலீசாரை தாக்க முற்பட்டதால் ரவுடி ஹரி துப்பாக்கியால் சுட்டுப் பிடித்தனர்.காயமடைந்த ஹரி தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

# உ.வே.சாமிநாதர் பிறந்தநாள் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாக கொண்டாடப்படும்: முதல்அமைச்சர் அறிவிப்பு

சென்னை, டிச.11

தமிழக சட்டசபையின் 2ம்நாள்கூட்டம்தொடங்கி நடைபெற்று வருகிறது. முதலில் கர்நாடக முன்னாள் முதல்மந்திரி எஸ்.எம்.கிருஷ்ணா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மோகன் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதில் அளித்து வருகின்றனர். இந்த நிலையில், டாக்டர். உ.வே. சாமிநாத ஐயரை கவுரவிக்கு விதமாக அவரது பிறந்தநாளான (பிப்ரவரி 19) தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாக கொண்டாடப்படும் என்று சட்டசபையில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். அதிமுக உறுப்பினர் கே.பி. முனுசாமி கேள்வி எழுப்பியதை அடுத்து இந்த அறிவிப்பை முதல்அமைச்சர் வெளியிட்டார்.

தமிழ் தாத்தா என அழைக்கப்படும் உ.வே. சாமிநாதர் பிறந்தநாள் பிப்ரவரி 19ம் தேதி கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது.

# ஆறு மாதத்திற்குள் ஆதவ் மனம் மாறுவாரா.. அல்லது திருமா அணி மாறுவாரா..? தமிழிசை கேள்வி

சென்னை, டிச.11

தி.மு.க.வை விமர்சித்து பேசிய விவகாரத்தில், விடுதலை சிறுத்தைகள் கட்சியில் இருந்து ஆதவ் அர்ஜுனாவை 6 மாதம் இடைநீக்கம் செய்து திருமாவளவன் நடவடிக்கை எடுத்திருந்தார். இதுதொடர்பாக திருமாவளவன் நேற்று வெளியிட்ட அறிக்கையில், "விடுதலை சிறுத்தைகள் கட்சியின் துணை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா அண்மைக் காலமாக கட்சியின் நலன்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டு வருகிறார் என்பது தலைமை நிர்வாகத்தின் கவனத்துக்குத் தெரிய வந்தது. கட்சி தலைமையின் அறிவுறுத்தல்களையும் மீறி அவர் தொடர்ச்சியாக எதிர்மறையாக செயல்பட்டு வருவதும், அத்தகைய செயல்பாடுகள், மேலோட்டமாக நோக்கினால் கட்சியின் நலன் மற்றும் அதிகார வலிமைக்கானதாக தோன்றினாலும், அவை கட்சி மற்றும் தலைமையின் மீதான நன்மதிப்பையும் நம்பகதன்மையையும் கேள்விக்குள்ளாக்கும் வகையில், பொதுவெளியில்கடுமையானவிமர்சனங்களை உருவாக்கி இருக்கிறது.

இத்தகைய போக்குகள், கட்சிப் பொறுப்பாளர்களிடையே நிலவும் கட்டுக்கோப்பைச் சீர்குலைக்கும் வகையில், கட்சிக்குள்ளேயே ஒரு எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், கட்சியினருக்கு இது ஒருதவறான முன்மாதிரியாக அமைந்து விடும் என்கிற சூழலையும் உருவாக்கி உள்ளது. இத்தகைய சூழலைக் கருத்தில் கொண்டு, கட்சியின் நலன்களை முன்னிறுத்தி கட்சித் தலைவர் மற்றும் பொதுச்செயலாளர்கள் ஆகிய 3 பேர் உள்ளடங்கிய தலைமை நிர்வாக குழுவில் ஆதவ் அர்ஜுனா மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, ஆதவ் அர்ஜுனா கட்சியிலிருந்து 6 மாத காலத்துக்கு இடைநீக்கம் செய்யப்படுகிறார்" என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த சூழலில் சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய திருமாவளவன், "விடுதலைச் சிறுத்தைகள் கட்சி யார் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்று பா.ஜனதா மாநில தலைவர் அண்ணாமலை கேட்டிருக்கிறார். பா.ஜனதா கட்சி, அதானி கட்டுப்பாட்டில் இருக்கிறதா? அல்லது மோடி கட்டுப்பாட்டில் இருக்கிறதா? என்பதை முதலில் அவர் சொல்லட்டும். பின்னர் நான் பதிலளிக்கிறேன்" என்று கூறியிருந்தார்.

இந்நிலையில் பா.ஜ.க மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தனது எக்ஸ் வலைதளத்தில், "ஆதவ் அர்ஜுன் ஆறு மாதத்திற்கு இடை நீக்கம்... அண்ணன் திருமா அறிவிப்பு.. ஆறு மாதத்திற்குள் ஆதவ் மனம் மாறுவாரா... அல்லது திருமா அணி மாறுவாரா... " என்று அவர் கேள்வி எழுப்பி உள்ளார்.

# நாமக்கல்லில் 262 கிலோ போதை பொருட்கள் பறிமுதல்: டிரைவரை போலீசார் கைது செய்தனர்



நாமக்கல், டிச.11

நாமக்கல் மாவட்டம் நல்லிபாளையம் அருகே உள்ள சின்ன அய்யம்பாளையம் பகுதியை சேர்ந்தவர் கார்த்திக் (வயது 43). இவர் சொந்தமாக மினி டெம்போ வைத்து தொழில் செய்து வருகிறார்.இந்த மினி டெம்போவில் நாமக்கல்லில் இருந்து முட்டை லோடு ஏற்றிக்கொண்டுஅவற்றை கர்நாடகா மாநிலத்திற்கு கொண்டு சென்று அங்குள்ள வியாபாரிகளிடம் விற்பனை செய்வது வழக்கம்.இந்த நிலையில் நேற்று கார்த்திக் தனது மினி டெம்போவில் முட்டை லோடு ஏற்றிக் கொண்டு கர்நாடகாவுக்கு சென்றார்.பின்னர் அவர் அங்கு முட்டை லோடு இறக்கி விட்டு அங்கிருந்து திரும்பியபோது தமிழக அரசால் தடை செய்யப்பட்ட ஹான்ஸ் 74 கிலோ, பான்மசாலா77 கிலோ, கூல் லிப்23 கிலோ உள்ளிட்ட 262 கிலோ போதை பொருட்களை மினிடெம்போவில் கடத்தி கொண்டு வந்தார்.மினி டெம்போ கிருஷ்ணகிரி, சேலம் மாவட்ட சோதனை சாவடிகளை கடந்து நாமக்கல் மாவட்டத்திற்குள் நுழைந்தது. அப்போது நாமக்கல் கருப்பட்டிபாளையம் பிரிவு சாலையில் நல்லிபாளையம் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டு கொண்டிருந்தனர்.அப்போது அந்த மினி டெம்போவை போலீசார் தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர். அதில் பதுக்கி வைத்திருந்த போதை பொருட்களை பறிமுதல் செய்து, டிரைவர் கார்த்திக்கை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.இந்த போதை பொருட்களின் மதிப்பு சுமார் ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றை கடைகளில் கொடுத்து விற்பனை செய்வதற்காக கடத்தி கொண்டு வந்துள்ளார். பறிமுதல் செய்யப்பட்ட இந்த போதை பொருட்கள் மற்றும் மினி டெம்போ ஆகியவை நல்லிபாளையம் போலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

# வேதாரண்யம் கடற்கரையில் கரை ஒதுங்கிய மியான்மர் படகு



நாகப்பட்டினம், டிச.11

நாகை மாவட்டம், வேதாரண்யம் புஷ்பவனம் மீனவ கிராமத்தில், இன்று காலை 8 மணியளவில் மியன்மார் நாட்டை சேர்ந்த மூங்கிலால் கட்டபட்ட மீன்பிடிக்க பயன்படுத்தக்கூடிய படகு கரை ஒதுங்கியுள்ளது.இந்த மூங்கில் படகு 40 அடி நீளம், 15 அடி அகலம், 8 அடி உயரம் கொண்டதாகவும் சுமார் 150 மூங்கல்களால் கட்டபட்டுள்ளது. மழை நேரங்களில் தங்குவதற்கு ஏற்றார் போல் 6 அடி நீளம் 4 அடி அகலம் 4 அடி உயரம் கொண்ட ஓலையால் ஆன கூரை ஒன்றும் உள்ளது.இந்த படகில் மீன் பிடிக்கபயன்படுத்த கோழி தீவனம் 2 மூட்டை சுமார் 30 கிலோ உள்ளது.இதுகுறித்து அப்பகுதி மீனவர்கள் வேதாரணியம் கடலோர காவல் குழுவினருக்கு தகவல் கொடுத்தனர். இதைத்தொடர்ந்து வேதாரணியம் கடலோர காவல் குழுவின் இன்ஸ்பெக்டர் லோகநாதன், சப்இன்ஸ்பெக்டர்கள் வரலட்சுமி, சுதாகர் மற்றும் போலீசார் படகை கைப்பற்றினர். பின்னர் அந்த படகில் மியான்மர் நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் யாரும் வந்தார்களா அல்லது புயலால் கரைதட்டியதா என விசாரித்து வருகின்றனர்.

# செஞ்சி அருகே வெள்ள நிவாரணம் கேட்டு கிராம மக்கள் சாலை மறியல்



செஞ்சி, டிச.11

கடந்த வாரம் பெய்த புயல் மழையால் செஞ்சி பகுதியில் ஏராளமான வீடுகள் மற்றும் நிலங்கள் பாதிக்கப்பட்டது. இந்நிலையில் செஞ்சி ஒன்றியத்தை சேர்ந்த கிராமங்களில் வெள்ள நிவாரண பணம் வழங்கப்பட்டு வருகிறது.ஆனால் பக்கத்து ஒன்றியமான மேல்மலையனூர் ஒன்றியத்தில் வெள்ள நிவாரணம் வழங்கப்படவில்லை என கூறப்படுகிறது.எனவே தங்களுக்கும் வெள்ள நிவாரணம் வழங்க வேண்டும் என கேட்டு மேல்மலையனூர் ஒன்றியம் சொக்கனந்தல் கிராமத்தை சேர்ந்த பொதுமக்கள் இன்று காலை செஞ்சிதிருவண்ணாமலை தேசிய நெடுஞ்சாலையில் சத்தியமங்கலம் அருகே சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் அங்கு போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தகவலறிந்து சென்ற சத்தியமங்கலம் போலீஸ் இன்ஸ்பெக்டர்அரிகிருஷ்ணன் தலைமையிலான போலீசார் சாலை மறியலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

# டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கு எதிராக சட்டசபையில் தனித்தீர்மானம் நிறைவேற்றம்

சென்னை, டிச.11

மதுரைஅரிட்டாப்பட்டியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கு எதிராகசட்டசபையில் தனித்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சுரங்கத்திற்கு தேர்வான பகுதி குடைவரை கோவில், அரிய வகை உயிரின வாழ்வாதாரமாக இருக்கிறது.

இந்நிலையில் டங்ஸ்டன் சுரங்கத்திற்கான அனுமதியை ரத்து செய்ய மத்திய அரசை வலியுறுத்தி சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.தீர்மானத்தை முன்மொழிந்து அமைச்சர் துரைமுருகன் உரையாற்றினார். தீர்மானத்தில், டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கு இந்துஸ்தான் சிங்க் நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்ய வலியுறுத்தப்பட்டது.

# விசிக கட்சியில் இருந்து ஆதவ் அர்ஜுனா சஸ்பெண்ட்



சென்னை, டிச.11

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் துணை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா சர்ச்சைக்குரிய கருத்துக்களை தொடர்ந்து கூறிவருவதாக அவர் மீது அவரது சொந்த கட்சியினரே புகார் கூறி வந்தனர். இந்நிலையில் சமீபத்தில் நடைபெற்ற புத்தக வெளியிட்டு விழாவில் ஆதவ் அர்ஜுனா கூறிய கருத்துக்கள் தமிழக அரசியலில் பேசும்பொருளாகமாறின. மேலும் திமுக கூட்டணியில் அங்கம் வகிக்கும் விசிக கட்சிக்கு நெருடலான சூழலை ஏற்படுத்தியது.இதையடுத்து ஆதவ் அர்ஜுனா மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விசிக கட்சியினர் கோரிக்கை விடுத்தனர். இதை தொடர்ந்து அக்கட்சியின் உயர்மட்ட குழு நடத்திய ஆலோசனை கூட்டத்தில் ஆதவ் அர்ஜுனாவை விசிக கட்சியில் இருந்து 6 மாதம் சஸ்பெண்ட் செய்வதென முடிவெடிக்கப்பட்டதாக தெரிகிறது.இது குறித்து விசிக சார்பில் அதிகாரபூர்வ அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில் ஆதவ் அர்ஜுனா விசிக கட்சியில் இருந்து 6 மாதங்களுக்கு இடைநீக்கம் செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மேலும் அந்த அறிக்கையில் கூறியிருப்பதாவது:1. கட்சியின் துணை பொதுச் செயலாளர் திரு. ஆதவ் அர்ஜுனா அவர்கள் அண்மைக் காலமாக கட்சியின் நலன்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டு வருகிறார் என்பது தலைமை நிர்வாகத்தின் கவனத்துக்குத் தெரியவந்தது.2. இது குறித்து கடந்த 7122024 அன்று கட்சியின் பொதுச் செயலாளர்கள் உள்ளிட்ட முன்னணித் தோழர்களுடன் கலந்தாய்வு செய்யப்பட்டது.3. கட்சித் தலைமையின் அறிவுறுத்தல்களையும் மீறி, தொடர்ச்சியாக அவர் எதிர்மறையாக செயல்பட்டு வருவதும் அத்தகைய செயல்பாடுகள், மேலோட்டமாக நோக்கினால், கட்சியின் நலன்கள் மற்றும் அதிகார வலிமைக்கானதாகத் தோன்றினாலும், அவை கட்சி மற்றும் தலைமையின் மீதான நன்மதிப்பையும் நம்பகத்தன்மையையும் கேள்விக்குள்ளாக்கும் வகையில் பொதுவெளியில் கடுமையான விமர்சனங்களை உருவாக்கியிருக்கிறது.4. இத்தகைய போக்குகள், கட்சிப் பொறுப்பாளர்களிடையே நிலவும் கட்டுக் கோப்பைச் சீர்குலைக்கும் வகையில், கட்சிக்குள்ளேயே ஒரு எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், கட்சியினருக்கு இது ஒரு தவறான முன்மாதிரியாக அமைந்து விடும்என்கிறசூழலையும் உருவாக்கியுள்ளது.5. இத்தகைய சூழலைக் கருத்தில் கொண்டு, கட்சியின் நலன்களை முன்னிறுத்தி, கட்சித் தலைவர் மற்றும் பொதுச்செயலாளர்கள் ஆகிய மூவர் உள்ளடங்கிய தலைமை நிர்வாகக் குழுவில், திரு.ஆதவ் அர்ஜுனா அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.6. அதன்படி, திரு. ஆதவ் அர்ஜுனா அவர்கள் கட்சியிலிருந்து ஆறுமாத காலத்துக்கு இடைநீக்கம் செய்யப்படுகிறார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 2025ல் மதுரை மீனாட்சியம்மன் கோவில் குடமுழுக்கு: அமைச்சர் சேகர்பாபு அறிவிப்பு



மதுரை, டிச.11

மதுரைமீனாட்சியம்மன் கோவில் குடமுழுக்கு குறித்த முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூவின் கேள்விக்கு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு பதில் அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் 63 பணிகள் நடைபெறுகிறது. அதில் 40 பணிகள் உபயதாரர்கள் மூலம் நடைபெறுகிறது.கோவிலில் உள்ள வீர வசந்தராயர் மண்டபத்தில் 2018ல் தீவிபத்து ஏற்பட்ட நிலையில் சீரமைப்பு பணி நடைபெறுகிறது. வசந்தராயர் மண்டபத்தை புதுப்பிக்க தேவைப்படும் 25அடி நீளம் கொண்ட கல்தூண்கள்கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.கற்கள் பெற தலைமைச்செயலாளர் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடத்தி அனுமதி பெறப்பட்டது.25 அடி நீளம் கொண்ட கல்லை பெறுவதற்காக ரூ.19 கோடியில் ஒப்பந்தம் கோரப்பட்டு போர்க்கால அடிப்படையில் பணி நடைபெற்று வருகிறது.

மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் அடுத்தாண்டு டிசம்பர் மாதத்திற்குள் குடமுழுக்கு நடைபெறும் என்று அமைச்சர் சேகர் பாபு அறிவித்தார்.

# மதுரை பாதாள சாக்கடை பணிகள் அதிமுக எம்எல்ஏ கேள்விக்கு அமைச்சர் கே.என்.நேரு பதில்

சென்னை ,டிச.11

தமிழக சட்டசபை இன்று கூடியது. கூட்டம் தொடங்கியதும் முன்னாள் எம்.எல்.ஏ.க்கள், பிரமுகர்களின் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதைத்தொடர்ந்து தமிழக சட்டசபையில் கேள்வி நேரம் தொடங்கியது. உறுப்பினர்களின் கேள்விகளுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் பதில் அளித்து வருகின்றனர். மதுரையில் பாதாள சாக்கடை பணிகள் மேற்கொள்வது குறித்து அதிமுக எம்எல்ஏ ராஜன் செல்லப்பா, மதுரை நகரப் பகுதிகளில் சாலை மற்றும் பாதாள சாக்கடை பணிகள் எப்போது முடியும் என கேள்வி எழுப்பினார். அதற்குஅமைச்சர்கே.என். நேரு பதில் அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:கடந்தாண்டு குடிநீர் திட்டம் மேற்கொள்ளப்பட்ட நிலையில் வரும் நிதியாண்டில் பாதாள சாக்கடை பணிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.மதுரை புறநகரில் ரூ.2,000 கோடி, மாநகர பகுதியில் ரூ.1,500 கோடியில் கூட்டு குடிநீர் திட்டப்பணி நடைபெறுகிறது.

வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்து மதுரை பாதாள சாக்கடை பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார்.

# சொத்து வரி உயர்வு: திருப்பூரில் வியாபாரிகள் போராட்டம் 18ந்தேதி கடைகள் அடைப்பு

திருப்பூர், டிச.11

திருப்பூர் மாநகராட்சியில் சொத்து வரி உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், மத்தியஅரசுவாடகை கட்டிடங்களுக்கு 18 சதவீதம் ஜி.எஸ்.டி., வரி விதித்திருப்பதற்கு கண்டனம் தெரிவித்தும் திருப்பூர் அனைத்து வியாபாரிகள் சங்கம் மற்றும் தொழில் அமைப்புகள் சார்பில் இன்று முதல் கடைகளில் கருப்பு கொடி ஏற்றி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.திருப்பூர் அரிசி கடை வீதி, பழைய மார்க்கெட் வீதி , புது மார்க்கெட் வீதி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட கடைகளில் வியாபாரிகள் கருப்புக் கொடி ஏற்றி உள்ளனர். அனைத்து வியாபாரிகள் சங்கப் பேரவையின் இந்த போராட்டத்திற்கு அ.தி.மு.க. ஆதரவு அளித்துள்ளது.வருகிற 18ந்தேதி காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரைகடை அடைப்பு போராட்டம் நடத்த உள்ளனர்.

# இந்தியாவில் அதிக விவாகரத்து வழக்குகள் பதிவாகும் மாநிலம் முதலிடம் எது தெரியுமா?

சென்னை, டிச.11

பணத்தை வாரி இறைத்து ஜாதகம், ஜோதிடம் என பொருத்தம் பார்த்து, குடும்ப உறுப்பினர்கள் மூலம் தீர விசாரித்து நடத்தப்படும் திருமண பந்தத்தில் அடியெடுத்து வைக்கும் இளம்ஜோடிகளில் சிலர், தேனிலவுக்கு செல்லும் இடத்தில் கூட பரஸ்பர புரிதல் இல்லாமல் சண்டையோடு பிரிந்து செல்வதும் அரங்கேறி வருகிறது. காதல் திருமணம் செய்தவர்களிலும் சிலர் பிரிந்து விடுகிறார்கள். ஒளிவு மறைவு இல்லாத கணவன் மனைவி என்ற புனிதமான உறவுக்குள் தனி உரிமை எனும் புது கலாசாரத்தை புகுத்தி விவாகரத்தில் கொண்டுபோய் நிறுத்தும் அளவுக்கு பல தம்பதியர் வந்து விட்டதும் வேதனைக்குரிய விஷயம். கூட்டுக் குடும்ப வாழ்க்கையில் இருந்து எப்போது நாம் விலகினோமோ அப்போது இருந்தே விவாகரத்தும் அதிகரிக்க தொடங்கி விட்டது. தமிழகத்தில் விவாகரத்து கோரி கோர்ட்டை நாடுவோரின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. அதுவும் சென்னை, கோவை, மதுரை, திருச்சி, சேலம் போன்ற நகரங்களில் செயல்படும் குடும்ப நல கோர்ட்டுகளில் விவாகரத்து வழக்குகள் எகிறிக் கொண்டே இருக்கிறது. இதன் காரணமாக கோர்ட்டுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய கட்டாய சூழலும் ஏற்பட்டு உள்ளது. அந்த அடிப்படையில்தான் சென்னையில் ஏற்கனவே இருந்து வந்த குடும்ப நல கோர்ட்டுகளின் எண்ணிக்கை 4ல் இருந்து 8 ஆக உயர்த்தப்பட்டு உள்ளது. இருந்தாலும் குடும்பநல கோர்ட்டுகளில் கூட்டம் குறைந்தபாடில்லை. தமிழகத்தில் உள்ள 40 குடும்ப நல கோர்ட்டுகளில் இந்த ஆண்டு (2024) வரை விவாகரத்து, ஜீவனாம்சம் கோருதல், ஒன்றாக சேர்த்து வைக்க கோருதல், பரஸ்பர விவாகரத்து என 33 ஆயிரத்து 213 வழக்குகள் நிலுவையில் உள்ளன. இதில் 17 ஆயிரத்து 638 வழக்குகள் இந்த ஆண்டு தாக்கல் ஆனவை. மொத்தம் நிலுவையில் உள்ள வழக்குகளில், இந்த ஆண்டு மட்டும் 19 ஆயிரத்து 240 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டு உள்ளன. கடந்த 10 ஆண்டுகளை ஒப்பிடுகையில் விவாகரத்து வழக்குகள் 3 மடங்கு அதிகரித்திருப்பது புள்ளிவிவரங்கள் மூலம் தெரிகிறது. சென்னையை பொறுத்தமட்டில் கடந்த 2014ம் ஆண்டு 2 ஆயிரத்துக்கும் குறைவான விவாகரத்து வழக்குகளே தாக்கல் ஆகின. ஆனால், தற்போது (2024) 5 ஆயிரத்து 500க்கும் அதிகமான விவாகரத்து வழக்குகள் தாக்கலாகி உள்ளன. விவாகரத்து கோரி கோர்ட்டை நாடுவோரில் இந்தியாவிலேயே மகாராஷ்டிரா மாநிலம்தான் முதலிடத்தில் உள்ளது. தமிழகத்தை பொறுத்த மட்டில் சற்று ஆறுதல் அளிக்கும் வகையில் தமிழகம் 6வது இடத்தில் இருக்கிறது. 2வது இடத்தில் கர்நாடகாவும், 3வது இடத்தில் உத்தரபிரதேசமும் உள்ளது. மேற்குவங்காளம் 4வது இடத்திலும், டெல்லி 5வது இடத்திலும் இருக்கிறது. இந்தியாவில் விவாகரத்து கோருவோரில் 25 முதல் 35 வயதுடையோர் 50 சதவீதமும், 18 முதல் 25 வயதுடையோர் 35 சதவீதமும், 35 வயதுக்கு மேல் 15 சதவீதமும் இருப்பதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. விவாகரத்து கோரி வழக்கு தொடரும் தம்பதியரை மீண்டும் பரஸ்பர புரிதலுடன் சேர்த்து வைக்க வேண்டும் என்பதுதான் குடும்பநல கோர்ட்டின் முக்கிய நோக்கம். தவிர்க்க முடியாத சூழலில் தான் விவாகரத்து என்ற நிலைக்கு செல்ல வேண்டும் என்பதுதான் இந்த கோர்ட்டின் மையக் கருத்து. இந்த அடிப்படையில் தான் நன்கு பயிற்சி பெற்ற மனநல ஆலோசகர்கள் மூலம் விவாகரத்து கோரி வரும் தம்பதியருக்கு கவுன்சிலிங் கொடுக்கப்படுகிறது. ஆனாலும், இருதரப்பும் சமரசத்துக்கு இடம் கொடுக்காமல் இளம்வயதிலேயே வாழ்க்கையை தொலைத்து வருவது கவலை அளிப்பதாகவே உள்ளது. படிப்பு, சம்பாத்தியம், யாருடைய துணையும் இன்றி வாழ முடியும் என்ற இளம் பெண்களின் அசட்டு தைரியம் திருமணம் எனும் ஆயிரம் காலத்து பயிர் முளையிலேயே கருகும் அபாயத்தை உருவாக்கி விட்டது. வாழ்க்கை வாழ்வதற்கே. சண்டை சச்சரவு எதுவானாலும் விவாகரத்து தீர்வு இல்லை என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். அப்போது தான் விவாகரத்து எனும் நோயை விரட்ட முடியும்.

# கோவில்பட்டி: காணாமல்போன சிறுவன் பக்கத்து வீட்டு மாடியில் சடலமாக மீட்பு

கோவில்பட்டி, டிச.11

கோவில்பட்டி காந்திநகர் முத்துராமலிங்க தெருவை சேர்ந்தவர் கார்த்திக் முருகன். இவரது மனைவி பாலசுந்தரி. கூலி தொழிலாளியான இவர்களது 2வது மகன் கருப்பசாமி (வயது10). இவன் பள்ளி ஒன்றில் 5ம் வகுப்பு படித்து வருகிறார். கடந்த ஒரு வாரகாலமாக அம்மை நோயினால் பாதிக்கப்பட்ட கருப்பசாமி பள்ளிக்குச் செல்லாமல் வீட்டில் இருந்து வந்துள்ளார்.

இந்த சூழலில் நேற்று கார்த்திக் முருகனும், பாலசுந்தரியும் வேலைக்கு சென்று விட்டனர்.

கருப்பசாமி மட்டும் வீட்டில் இருந்துள்ளான்.

வீட்டிலிருந்த கருப்பசாமி திடீரென மாயமாகி விட்டான். உறவினர் வீடுகளிலும், அக்கம் பக்கத்தில் தேடியும் அவனை பற்றிய தகவல் கிடைக்கவில்லை. இதை தொடர்ந்து மாயமான கருப்பசாமியை கண்டுபிடித்து தருமாறு போலீஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. இதன்பேரில் போலீசார் வழக்குப் பதிவு செய்து, மாயமான சிறுவனை தேடி வந்தனர்.



இந்நிலையில் நேற்று காணாமல்போன சிறுவன் கருப்பசாமி, பக்கத்து வீட்டு மாடியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பக்கத்து வீட்டு மொட்டை மாடியில் மூச்சு பேச்சு இல்லாமல் கிடந்த சிறுவன் கருப்பசாமியை மருத்துவமனைக்கு கொண்டு சென்ற நிலையில் சிறுவன் பல மணி நேரத்திற்கு முன்பே இறந்து விட்டதாக டாக்டர்கள் தெரிவித்தனர்.

இதனிடையே சிறுவன் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலி மற்றும் மோதிரம் காணாமல் போயுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்லூரி மாணவி பலாத்கார வழக்கு: மேலும் 2 பேர் கைது

சென்னை, டிச.11

சென்னையில் உள்ள மகளிர் கல்லூரி ஒன்றில் 21 வயதுடைய மன வளர்ச்சி குன்றிய மாணவி ஆங்கில இலக்கியம் 3ம் ஆண்டு படித்து வருகிறார். இந்த நிலையில் கடந்த 6ந் தேதி அன்று மாணவி உடல்ரீதியாக பாதிக்கப்பட்டு இருந்தார். அப்போது தந்தை விசாரித்தபோது, 'என்னை கல்லூரி வாசலில் இருந்து சிலர் வெளியே அழைத்து சென்று பலமுறை பாலியல் பலாத்காரம் செய்தனர்' என்ற அதிர்ச்சி தகவலை கூறியுள்ளார்.

இதைக்கேட்டு அதிர்ந்து போன அவர், சிந்தாதிரிப்பேட்டை அனைத்துமகளிர்போலீஸ் நிலையத்தில் புகார் மனு அளித்தார். புகாரின்பேரில் சிந்தாதிரிப்பேட்டை அனைத்து மகளிர் போலீசார் 8 பேர் மீது 9 பிரிவுகளின் கீழ் வழக்குபதிவு செய்தனர். இதையடுத்து கல்லூரி மாணவி கூட்டு பாலியல் பலாத்கார வழக்கில் தலைமறைவாக உள்ளவர்களை கைது செய்வதற்கு 3 தனிப்படைகள் அமைத்து போலீசார் வலைவீசி தேடி வந்தனர்.

இந்த நிலையில் சென்னையில் உள்ள ஆண்கள் அரசு கல்லூரியில் முதலாம் ஆண்டு படிக்கும் திருத்தணி அருகே உள்ள கிராமத்தைசேர்ந்தசுரேஷ், அதே பகுதியை சேர்ந்த பிளஸ் 2 மாணவர் ஆகிய இருவர் நேற்று கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்நிலையில், கல்லூரி மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த மணி மற்றும் சேலத்தை சேர்ந்த கார்த்திக் ஆகிய 2 பேடை தனிப்படை போலிசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மீதமுள்ளவர்களை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

# 8ம் வகுப்பு மாணவியை பாலியல் பலாத்காரம் செய்த கும்பல்

நாமக்கல், டிச.11

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் அருகே ஜேடர்பாளையத்தை அடுத்த ஒரு கிராமத்தை சேர்ந்த 13 வயது சிறுமி அப்பகுதியில் உள்ள அரசு பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வந்தார். இவர் கடந்த சில நாட்களுக்கு முன்பு திடீரென மாயமானார். இதுகுறித்து அவரது பெற்றோர் ஜேடர்பாளையம் போலீசில் புகார் செய்தனர். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து, மாயமான மாணவியை தேடி வந்தனர். இதற்கிடையே மாயமான மாணவி அவரது தாயாரின் செல்போனை எடுத்து சென்றதால், அந்த செல்போன் மூலம் மாணவியின் இருப்பிடத்தை போலீசார் கண்டுபிடித்தனர். பின்னர் அங்கு சென்ற போலீசார் அவரை மீட்டனர்.

மாணவியிடம் நடத்திய விசாரணையில், சமூக வலைதளம் மூலம் ஏற்பட்ட பழக்கத்தின் காரணமாக வாலிபர்கள் சிலர் திருவண்ணாமலைக்கு வரவழைத்து, மாணவியை பாலியல் பலாத்காரம் செய்தது தெரியவந்தது. இதைத்தொடர்ந்து இந்த வழக்கை போக்சோ வழக்காக மாற்றம் செய்த போலீசார் பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தினர்.

விசாரணையில் மாயமான மாணவியை திருவண்ணாமலையை சேர்ந்த விக்னேஷ், ஆகாஷ், இளங்கோவன், சஞ்சய், செல்வகுமரன் உள்பட 6 பேர் பாலியல் பலாத்காரம் செய்தது தெரியவந்தது. இதையடுத்து அங்கு விரைந்து சென்ற போலீசார் விக்னேஷ் உள்ளிட்ட 5 பேரையும் நேற்று கைது செய்தனர். மேலும் ஒரு வாலிபரை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ராட்சத அலையில் சிக்கி வடமாநில சுற்றுலா பயணி பலி

கன்னியாகுமரி, டிச.11

பிரசித்தி பெற்ற சுற்றுலா தலமான கன்னியாகுமரிக்கு தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். அவர்கள் சூரியன் உதயம் மற்றும் அஸ்தமிக்கும் காட்சியை கண்டு களித்து செல்கின்றனர். இந்தநிலையில் நேற்று காலையில் வாவத்துறை கடற்கரையில் சூரியன் உதயமாகும் காட்சியை காண ஏராளமானோர் திரண்டு இருந்தனர். அப்போது கடலில் ஒரு ஆண் பிணம் மிதந்தது. தகவல் அறிந்தது கன்னியாகுமரி கடலோர பாதுகாப்பு போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். அவர்கள் அதிநவீன ரோந்து படகு மூலம் கடலுக்குள் சென்று அலையில் மிதந்து கொண்டிருந்த ஆணின் உடலை மீட்டு கரைக்கு கொண்டு வந்தனர்.

தொடர்ந்து போலீசார் நடத்திய விசாரணையில், கடலில் பிணமாக மிதந்தவர் இமாச்சலபிரதேசம் மாண்டிபகுதியைச்சேர்ந்த பிரின்ஜிலால் (வயது64) என்பதும், இவருடன் மொத்தம்47பேர்கொண்ட குழுவினர் கன்னியாகுமரிக்கு சுற்றுலா வந்துள்ளதும், இவர் அதிகாலையில் வாவத்துறை கடல் பகுதியில் இறங்கி குளிக்க முயன்றபோது ராட்சத அலையில் சிக்கி பலியானது தெரியவந்தது.

# வெளியானது 'அமரன்' படத்தின் 'ஆசாதி' வீடியோ பாடல்



நடிகர்சிவகார்த்திகேயன்நடிப்பில்உருவானஅமரன்திரைப்படம் தீபாவளி வெளியீடாக அக்டோபர் 31ம் தேதி திரையரங்குகளில் வெளியானது. இந்தப் படத்தை நடிகர்கமல்ஹாசனின் ஆர்கேஎப்ஐ தயாரிப்பு நிறுவனம் தயாரித்துள்ளது. மறைந்த தமிழக ராணுவ மேஜர்முகுந்த் வரதராஜனின்வாழ்க்கையைத்தழுவி எடுக்கப்பட்ட இப்படம் ரசிகர்களிடம் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது. இதில்சிவகார்த்திகேயன்மேஜர்முகுந்தாகவும், முகுந்தின்மனைவி இந்துவாக நடிகை சாய் பல்லவியும் நடித்துள்ளனர்.

இந்த படத்தின் ஜி.வி. பிரகாஷ் குமார் இசையமைத்துள்ளார். உலகளவில் கிட்டதட்ட 900க்கும் மேற்பட்ட திரையரங்குகளில் 'அமரன்'திரைப்படம்வெளியாயிற்று. இத்திரைப்படம்வெளியான முதல் நாளில் உலகளவில் 42.3 கோடி ரூபாய் வசூலித்துள்ளதாக படக்குழு அறிவித்தது. இப்படம் இதுவரை சுமார் ரூ.350 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளது. மேலும் இப்படம் ஓ.டி.டி.யில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

இந்நிலையில் 'அமரன்' படத்தின் 'ஆசாதி' என்ற வீடியோ பாடல் வெளியாகி உள்ளது. இப்பாடலை தெருக்குரல் அறிவு எழுதி பாடியுள்ளார்.

# ரஜினியை சந்தித்து வாழ்த்து பெற்ற சங்கமித்ரா அன்புமணி




பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸின் மகளான சங்கமித்ரா அன்புமணி தயாரிப்பாளராக தற்போது களமிறங்கியிருக்கிறார். அதன்படி தன்னுடைய முதல் தயாரிப்பில் அலங்கு எனும் திரைப்படத்தை தயாரித்திருக்கிறார். இந்த படத்தை எஸ்.பி. சக்திவேல் எழுதி இயக்கியுள்ளார். இவர் ஏற்கனவே உறுமீன், பயணிகள் கவனிக்கவும் போன்ற படங்களை இயக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த படமானது புலம்பெயர்ந்துதொழில்செய்யும்பழங்குடியினரின்வாழ்க்கையை பதிவு செய்யும் விதமாகவும் தமிழ்நாடு மற்றும் கேரளா எல்லை பகுதியில் நடந்த உண்மை சம்பவத்தை மையமாக வைத்தும் உருவாக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்த படம் ஆக்சன் திரில்லர் கதைக்களத்தில் உருவாகி இருக்கிறது. இந்த படத்தில் குணாநிதி, செம்பன் வினோத், காளி வெங்கட் , சரத் அப்பானி ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கின்றனர்.

இந்த படத்திற்கு எஸ் பாண்டி குமார் ஒளிப்பதிவு செய்ய அஜஸ் இந்த படத்திற்கு இசையமைத்துள்ளார். இந்த படம் வருகின்ற டிசம்பர் 27ம் தேதி திரைக்கு வர தயாராகி வருகிறது. இதற்கிடையில் இந்த படத்தில் இருந்து அடுத்தடுத்த பாடல்களும் வெளியாகி ரசிகர்களை வெகுவாக கவர்ந்துள்ளது.

இந்நிலையில் ரஜினிகாந்த், அலங்கு படத்தின் டிரெய்லரை பார்த்து படக்குழுவினரை சந்தித்து பாராட்டி உள்ள நிலையில் தயாரிப்பாளர் சங்கமித்ரா ரஜினியிடம் வாழ்த்து பெற்றுள்ளார். இது தொடர்பான புகைப்படம் இணையத்தில் வைரலாகி வருகிறது. இப்படத்தின் டிரெய்லரை இன்று மாலை 5 மணிக்கு ரஜினிகாந்த் வெளியிடுகிறார்.

நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் தருமபுரி தொகுதியில் சவுமியா அன்புமணிக்கு ஆதரவாக சங்கமித்ரா பிரசாரம் மேற்கொண்டது கவனிக்கத்தக்கது.

# சாந்தனு, ஷேன் நிகாம் கூட்டணியில் உருவாகும் புதிய படத்தின் படப்பிடிப்பு பூஜை

தமிழ் சினிமாவில் பன்முக திறமை வாய்ந்தவர்களில் மிக முக்கியமானவர் இயக்குநர் கே.பாக்யராஜ். இவரின் மகனான சாந்தனு குழந்தை நட்சத்திரமாக பாக்யராஜ் படங்களில் நடித்துள்ளார். தொடர்ந்து சக்கரக்கட்டி என்ற படம் மூலம் ஹீரோவாக தமிழ் சினிமாவில் அறிமுகமான அவர் தனக்கென தனியிடம் கிடைக்க போராடி வருகிறார். வித்தியாசமான கதைகளை கொண்ட படங்களாக இருந்தாலும் நீண்ட ஆண்டுகளாகவே வெற்றி என்ற ஒன்று கிடைக்காமல் இருந்தது. சக்கரக்கட்டி படத்தை தொடர்ந்து அவர் ஆயிரம் விளக்கு, அம்மாவின் கைப்பேசி, மாஸ்டர், ராவணக்கோட்டம் என ஏராளமான படங்களில் நடித்திருந்தார். இவர் கடைசியாக அசோக் செல்வன் உடன் இணைந்து ப்ளூ ஸ்டார் என்ற திரைப்படத்தில் நடித்திருந்தார். இந்த படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. அதே சமயம் மலையாளத் திரை உலகில் பிரபல நடிகராக வலம் வருபவர் ஷேன் நிகாம். இவர் தமிழில் மெட்ராஸ்காரன் என்ற படத்தின் மூலம் அறிமுகமாகியுள்ளார். இந்த படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று முடிந்துள்ள நிலையில் படமானது ரிலீஸுக்கு தயாராகி வருகிறது. இந்நிலையில் சாந்தனு மற்றும் ஷேன் நிகாம் ஆகியோர் இணைந்து புதிய படம் ஒன்றில் நடிக்கின்றனர். இந்த படத்தினை எஸ்டிகே பிரேம்ஸ் நிறுவனமும் ஜார்ஜ் பி அலெக்சாண்டர் புரொடக்சன்ஸ் நிறுவனமும் இணைந்து தயாரிக்கிறது. இந்த படத்தினை உன்னி சிவலிங்கம் இயக்குகிறார்.

இந்த படத்தில் சாந்தனு மற்றும் ஷேன் நிகாம் ஆகியோருடன் இணைந்து அயோத்தி பட நடிகை பிரீத்தி அஸ்ராணி முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இந்த படத்தின் பூஜை நேற்று சிறப்பாக நடந்து முடிந்துள்ளது. இது தொடர்பான புகைப்படங்களை நடிகர் சாந்தனு தனது சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ளார். இந்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது. மேலும் இந்த படம் தொடர்பான மற்ற அப்டேட்கள் இனிவரும் நாட்களில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சச்சின் வழியை பின்பற்றினால் விராட் கோலி மீண்டும் ரன் குவிக்கலாம் கில்கிறிஸ்ட் அட்வைஸ்




ஆஸ்திரேலியா இந்தியா இடையே 5 போட்டிகள் கொண்ட பார்டர் கவாஸ்கர் கோப்பை டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் முதல் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது. ஆனால் 2வது போட்டியில் இந்தியாவை தோற்கடித்த ஆஸ்திரேலியா தொடரைசமன் செய்து பதிலடி கொடுத்துள்ளது.

அதனால் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கு முன்னேற இந்தியா அடுத்த 3 போட்டிகளிலும் கட்டாயம் வென்றாக வேண்டிய இக்கட்டான சூழலில் உள்ளது. அந்த சூழலில் இவ்விரு அணிகளுக்கு இடையிலான 3வது போட்டி வரும் 14ம் தேதி காபா மைதானத்தில் தொடங்க உள்ளது.

முன்னதாக இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திர பேட்ஸ்மேனான விராட் கோலி முதல் போட்டியில் சதம் அடித்து அசத்தியதால் மீண்டும் பார்முக்கு திரும்பியதாக ரசிகர்கள் கருதினர். ஆனால் 2வது போட்டியில் 7,11 ரன்கள் அடித்து மோசமான செயல்பாட்டை வெளிப்படுத்தினார். அதனால் மீண்டும் அவர் மீது விமர்சனங்கள் விழுந்துள்ளன.

இந்நிலையில் கடந்த 2004ம் ஆண்டு ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக சச்சின் எவ்வாறு விளையாடினாரோ அதைப் போன்று விராட் கோலி செய்தால் நிச்சயம் அவரால் மீண்டும் இந்த தொடரில் ரன் குவிக்க முடியும் என ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் கேப்டனான கில்கிறிஸ்ட் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இது குறித்து பேசிய அவர் கூறுகையில், "ஒரு பேட்ஸ்மேனுக்கு மிகப்பெரிய ஸ்கோர் என்பது உங்களை நோக்கி வீசும் பந்துவீச்சாளர்களிடம் இருந்து வருவதோ, எதிரணியின் திறமையிடமிருந்து வருவதோ கிடையாது. நாம் நமது கட்டுப்பாட்டில் பேட்டிங்கை வெளிப்படுத்தினால் கிடைப்பதுதான் மிகப்பெரிய ஸ்கோர்.

2004ம் ஆண்டு சிட்னி மைதானத்தில் ஆஸ்திரேலியா அணிக்கு எதிராக சச்சின் எவ்வாறு வெளியே சென்ற பந்துகளை துரத்தி விளையாடாமல் 241 ரன்கள் குவித்தாரோ அதேபோன்று விராட் கோலியும் சூழலுக்கு ஏற்றவாறு பந்தைதுரத்தாமல்தனக்கு நேராக வரும் பந்துகளைஅடித்து விளையாடினால் மிகப்பெரிய ஸ்கோரை எடுக்க முடியும். களத்தில் நீண்ட நேரம் இருக்க பொறுமை மிக அவசியம்" என்று கூறினார்.

# ரிஷப் பண்ட்டை பாராட்டிய இங்கிலாந்து வீரர் ஹாரி புரூக்



இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட பார்டர் கவாஸ்கர் கோப்பை டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் பெர்த்தில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 295 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரில் 10 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2வது டெஸ்ட் பகல்இரவு போட்டியாக அடிலெய்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் படுதோல்வியை சந்தித்துள்ளது.

இந்த நிலையில், அடிலெய்டு டெஸ்ட் போட்டியில் இந்தியஅணிவிக்கெட்டுகள்இழந்தபோதும்அதிரடியாக விளையாடிய இந்திய வீரர் ரிஷப் பண்ட்டை இங்கிலாந்து வீரர் ஹாரி புரூக் பாராட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, இந்திய அணி விக்கெட்டுகளை இழந்த போது தான் எதிர்கொண்ட முதல் பந்தை ரிஷப் பண்ட் அதை அணுகிய விதத்தை நீங்கள் பார்த்தீர்களா என்று எனக்கு தெரியாது. பிட்ச்சில் இறங்கி வந்து பந்தை விளாசினார். அதற்கு அசாத்திய தைரியம் வேண்டும். அதை நாங்கள் கடந்த சில ஆண்டுகளாக களத்தில் செய்து வருகிறோம். நாங்கள் களத்தில் ரன் குவிக்கவே விரும்புகிறோம், என ஹாரி புரூக் தெரிவித்துள்ளார். அடிலெய்டு டெஸ்ட் போட்டியில் இரண்டாவது இன்னிங்ஸில் இந்திய அணி 66 ரன்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்தது. அப்போது களம் கண்ட ரிஷப் பண்ட் , முதல் பந்தை பிட்ச்சில் இறங்கி வந்து பவுண்டரிக்கு விரட்டினார். இருப்பினும் அந்த இன்னிங்ஸில் பண்ட் 31 பந்துகளில் 28 ரன்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

**NAMADHU DHINA KANI**
**Canara Bank**
**Account: 120028528266**
**IFSC code: CNRB0001041**

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.